**தலைப்பு 266 – வவுனியா மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 266 – வவுனியா மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 27 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

மாவட்ட செயலகத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 263.25 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 262.07 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 1.18 மில்லியன் அதாவது 0.45 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 186.63 | 186.25 | 0.38 | 0.20 |

| | | | | |
|---|---|---|---|---|
| மூலதனம் | 76.62 | 75.82 | 0.80 | 1.04 |
| | ----------- | ----------- | ------------ | |
| மொத்தம் | 263.25 | 262.07 | 1.18 | 0.45 |
| | ====== | ===== | ===== | |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு 26 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 12 திணைக்களங்களினால் ரூபா 505.50 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 476.82 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 28.68 மில்லியன் அதாவது 5.67 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

வவுனியா மாவட்ட செயலகத்திற்குரிய 26601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 12.25 | 12.23 | 8.25 | 10.16 | 40.00 | 35.84 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 7002/0000/00/0284/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதி ரூபா 29.55 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 03 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 111.89 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0013/0083/000 | 73.97 |
| 6000/0000/00/0014/0014/000 | 9.58 |
| 6000/0000/00/0016/0072/000 | 28.34 |
| மொத்தம் | 111.89 |

### 2.5 கணக்காய்வு அவதானிப்பு

வவுனியா மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ii) | இழப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை |
| (iii) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) அபிவிருத்தி நிதித் திணைக்களம்**

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் அதிமேதகு சனாதிபதியினால் வரட்சியினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட சிறியளவிலான விவசாயிகளுக்கு உதவி வழங்கும் நோக்கில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்ட செயலாளருக்கு நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 16,533 விவசாயிகளுக்கு ரூபா 139.25 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 நவம்பர் 07 ஆந் திகதிய 7/5/8/4/ -254 ஆம் இலக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நலனாளிகளைத் தெரிவு செய்யும் போது வயல் பெயர்ப் பதிவேடு அல்லது பசளை மானிய பதிவேடு அல்லது ஏக்கர் வரி பதிவேடுகள் மூலம் காணிகளின் விபரங்கள் உறுதிப்படுத்த வேண்டியிருந்தது. அந்த பதிவேடுகளின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதவிடத்து குழுவொன்றை நியமித்து அதன் மூலம் காணிகளின் அளவு தீர்மானிக்கப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பதிவேடு திருத்தப்படாதிருந்தமையால் குழுவின் மூலம் தீர்மானம் எடுக்கப்பட்ட நலனாளிகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் குழு நியமிக்கப்பட்டமைக்கு அந்தக் குழுவின் மூலம் தீர்மானம் எடுக்கப்பட்டமைக்கும் ஆன தேவையான எழுத்த மூல தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வவுனியா மாவட்டத்தில் 2014 இன் சிறு போகத்தில் பயிர்செய்யப்பட்ட 4,387 ஏக்கர் காணிக்கு உர மானியத்திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. அந்தக் காணிகள் வறட்சியினால் பாதிக்கப்படுமாயின் காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மூலம் இழப்பீட்டைப் பெறுவதற்கு உரித்துடையதாக இருந்தது. அதன் பிரகாரம் விவசாயிகளுக்காக ஏக்கர் ஒன்றிற்கு ரூபா 2,800 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 12,283,600 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) விவசாயிகளின் அதிகமானோர் பெரும் போகத்தில் வயல் காணிகளில் பயிர் செய்து சிறுபோகத்தில் வெறுமனேவிடுவது சாதாரண முறையாக இருந்தது. அதன் பிரகாரம் உர மானியத்தை வழங்கும் பதிவேட்டின் பிரகாரம் 2014 இன் சிறுபோகத்தில் 4,387 ஏக்கர் அளவில் பயிரிடப்பட்டிருந்ததுடன் அந்த அளவை விஞ்சி 45,346 ஏக்கருக்கு ரூபா 126.97 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) 2014 நவம்பர் 07 ஆந் திகதிய DFD/SP/2014 ஆம் இலக்க அரசாங்க நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் மானியங்களைக் கொடுப்பனவு செய்யும் போது நலன்பெறும் ஒவ்வொரு விவசாயிகளினாலும் அந்த வயல் காணி 2014/15 பெரும்போகத்தில் பயிர் செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) நிதி உதவிகள் செலுத்தப்பட்ட காணியின் ஏக்கர் அளவை 2014/2015 போகத்தில் பயிர்செய்த காணியின் அளவுடன் ஒப்பிட்ட போது 9,441 ஏக்கர் அளவான காணியில் பயிர் செய்யப்பட்டிருக்கவில்லை. பிரதேசத்தில் பதிவு செய்யாத அல்லது இனங்காண்பதற்கு முடியாதிருந்த வயல் காணிகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 9,441 ஏக்கர் வயல் காணிக்காக ரூபா 26.43 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்தப் பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளரினால் அனுப்பப்பட்டிருந்த பகுதியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

26601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 280,904 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் வருடமொன்றிற்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடந்த 03 வருடங்களுக்கு முன்னர் மெனிக் பாம் இலிருந்து கிடைத்த நான்கு சக்கர உழவு இயந்திரங்கள் இரண்டினதும் விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த வாகனங்களை பாவனையிலிருந்து அகற்றுவதற்கோ அல்லது பயன்படுத்துவதற்கோ அல்லது வேறு நிறுவனங்களுக்கு அல்லது பிரிவிற்கு கையளிப்பதற்கோ எவ்வித வேலைத்திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) யாழ்ப்பாண மாவட்ட செயலாளருக்குச் சொந்தமாக இருந்த தொழில்நுட்ப ரீதியில் காலவதியான மற்றும் பாரிய செலவினங்களைச் செய்து பழுதுபார்த்தலின் பின்னர் பயன்படுத்தக்கூடிய NEHRP செயற்திட்டத்தின் உத்தியோகத்தர்கள் பயன்படுத்திய 06 மோட்டார் சைக்கிள்களின் தேவை இனங்காணப்படாமல் 2012 யூலை 31 ஆந் திகதி மாவட்ட செயலகத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்தது. மோட்டார் சைக்கிள்களில் ஒரு மோட்டார் சைக்கிளை பழுதுபார்ப்பதற்காக ரூபா 38,620 செலவிடப்பட்டு மோட்டார் சைக்கிள் பெறுவதற்கு உரித்தற்ற உத்தியோகத்தரொருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. எஞ்சிய மோட்டார் சைக்கிள்கள் 2015 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2013/ 2014 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டிடத்தின் கீழ் மாடி 2015 ஆம் ஆண்டு முதல் மாதமொன்றிற்கு ரூபா 10,000 வீதம் வாடகைப் பணத்திற்கு சிற்றுண்டிச்சாலை நடாத்திச் செல்வதற்காக வழங்கப்பட்டிருந்தது. அந்த வருமானம்

அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் மாவட்ட செயலகத்தின் நலன்புரிச் சங்கத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வவுனியா மாவட்ட செயலாளருக்குரிய அரசாங்கத்தின் விடுதிகளுக்காக விண்ணப்பித்திருந்த அரசாங்க உத்தியோகத்தர்களின் காத்திருத்தல் பதிவேட்டின் பிரகாரம் பல்வேறு தரங்களில் அரசாங்க விடுதிகளுக்காக 2008 ஆம் ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தில் அரசாங்க விடுதிகள் கிடைக்காத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 74 ஆக இருந்தது. உத்தியோகத்தர்களின் சேவையின் அவசியம் மற்றும் வினைத்திறனை மேல் நிலைக்குக் கொண்டு வருவதற்கு அவர்களின் சேவை வசதிகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட அரசாங்கத்தின் விடுதிகள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து 06 விடுதிகள் பல்வேறு அரச நிறுவனங்கள், அரசியல் வாதிகளின் அலுவலகங்களுக்கும் மற்றும் நபர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன. இதனால் உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தின் விடுதி வசதிகளை வழங்குதல் வரையறுக்கப்பட்டிருந்ததுடன் அந்த விடுதிகளிலிருந்து 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எவ்வித வாடகை வருமானமும் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) வவுனியா பிரதேச செயலகத்தின் முதலாவது மாடியின் இரண்டாவது கட்ட நிர்மாணத்திற்காக ரூபா 5,065,982 தொகை மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(i) பொறியியலாளர் மதிப்பீட்டின் பிரகாரம் வேலை விடய இலக்கம் 4.18 இன் கீழ் ஜிப்சம் மோட்டின் (Gypsum Molding) சிவிலிம் மற்றும் LED மின் விளக்குகள் சுட்டிக்காண்பிக்கப்பட்ட இடங்களில் பொருத்துவதற்காக ரூபா 1,650,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. வேலை பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் நிர்மாணங்களைப் பொறுப்பேற்ற ஒப்பந்தகாரருக்கு ரூபா 1,596,802 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த வேலை விடயங்களுக்காக பகுப்பாய்வு ரீதியான செலவின விபரம் மற்றும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தகாரரினால் நிறைவேற்றப்பட்ட நிர்மாணங்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அந்த நிர்மாணங்கள் பொறியியலாளர்/ தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையின்றி மேற்கொள்ளப்பட்ட முறையற்ற கொடுக்கல் வாங்கல் ஒன்றாக அவதானிக்கப்பட்டது.

(ii) ஒப்பந்தகாரரினால் ஒப்பந்தக் காலத்தை நீடிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படாமல் 18 நாட்களினால் நீடிக்கப்பட்டிருந்தது. இதனால் அரசாங்கத்திற்கு ரூபா 22,180 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(iii) பொறியியலாளர் மதிப்பீட்டின் வேலை இலக்கம் 2.3, 2.4 மற்றும் 2.5 இற்குரிய வேலைப் பகுதிகள் (வர்ணம் பூசுதல்) வேலை இலக்கம் 4.13, 4.14 மற்றும் 4.15 இல் உள்ளடக்கப்பட்டமையின் அடிப்படையில் இரட்டைக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனால் அந்த வேலை விடயங்களின் பிரகாரம் வேலையின் பெறுமதி மற்றும் அளவினை கவனத்தில் கொள்ளும் போது பெறுமதி குறைத்துக் காண்பித்தமையின் அடிப்படையில் மொத்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 78,396 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் கொடுப்பனவுப் பட்டியல்களை ஒப்பீடு செய்த போது 52 வேலை விடயங்களில் கூட்டுமொத்தமாக ரூபா 2,050,803 மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 16 செலவின விடயங்களின் கூட்டுப்பெறுமதியான ரூபா 314,990 தொகையான வேலைப்பகுதி

மதிப்பீட்டில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு முறையான பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) உடன்படிக்கை செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 780,000 தொகையான 06 வளிப்பதனாக்கி இயந்திரங்களை வழங்கி பொருத்துவதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் அந்த செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2014 ஆம் ஆண்டில் வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை மூலம் யெஸிகா வகையின் டிஜிடல் கெமரா ஒன்று, கரம் பலகை ஒன்று, கெஸட் இயந்திரமொன்று மற்றும் 10 கெஸட் பீஸ் என்பவற்றின் பற்றாக்குறை அறிக்கையிடப்பட்டிருந்தது. எனினும் 2015 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அதில் நான்கு வகைப் பொருட்கள் அழிவடையச் செய்ய வேண்டிய பொருட்களாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரியதாக இருந்தது.

## 3.7 நட்டமும் இழப்பும்

வவுனியா பிரதேச செயலகத்தின் முதலாவது மாடியின் இரண்டாவது கட்ட நிர்மாணத்திற்காக ரூபா 5,065,982 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. அந்த நிர்மாணங்களை மேற்கொள்ளும் போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.9.2(ஆ) வழிகாட்டிக்கு முரணாக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 4,648,543 கேள்விப் பெறுமதி ரூபா 4,929,043 ஆக திருத்தப்பட்டிருந்தது. இதனால் அரசாங்கத்திற்கு ரூபா 280,500 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2012 ஆம் ஆண்டில் NECODE செயற்திட்டத்திற்குச் சொந்தமான கெப் வண்டியொன்று மாவட்ட திட்டமிடல் பிரிவிற்கு 2012 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்டிருந்தது. அந்தக் கெப் வண்டி கணக்காய்வுத் திகதியான 2015 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அக்காலப்பகுதியில் அதாவது 2014 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 189,050 செலவில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது,

## 3.9 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) 2011 நவம்பர் 29 ஆந் திகதிய MED/TR/05/9675 ஆம் இலக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் வவுனியாவின் அரசியல் கட்சியொன்றின் அமைப்பாளருக்கு கையளிக்கப்பட்ட டபள் கெப் வண்டியொன்று மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவினால் மீளக் கையேற்கப்பட்டிருந்தது. அக்கடிதத்தின் இறுதிப் பந்தியின் பிரகாரம் வாகனத்தைப் பயன்படுத்திய தரப்பினரிடமிருந்து கையேற்கும் போது மாவட்ட மோட்டார் வாகன பரீட்சகரின் பரிசோதனைக்கு உட்படுத்தியதன் பின்னர் கையேற்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறு செய்யப்படாதிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2015 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அந்த வாகனம் தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் உரிய அமைச்சிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 04 வருடகாலம் அவ்வாகனம் கராஜில் நிறுத்தி

வைக்கப்பட்டிருந்தது. மேலும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட ஆலோசனைகள் அமுல்படுத்தப்படாமையின் அடிப்படையில் வாகனத்தைப் பயன்படுத்திய நபரினால் வாகனத்திற்கு இழப்பொன்று ஏற்படுமாயின் அந்த இழப்பை அவரிடமிருந்து அறவிடுவதற்கிருந்த சந்தர்ப்பமும் அதன் மூலம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாவட்ட செயலகத்தில் பல வருட காலத்திலிருந்து சாரதிகளின் வெற்றிடங்கள் காணப்பட்ட போது திட்டமிடல் பிரிவிற்கு நியமிக்கப்பட்ட சாரதியொறுவருக்கு 2014 மார்ச் மாதம் முதல் 2015 நவம்பர் மாதம் வரையான காலத்தில் திட்டமிடல் பிரிவிற்கு சொந்தமான வாகனத்திற்கு அல்லது ஏனைய பிரிவிற்குரிய வாகனத்திற்கு அல்லது வேறு திணைக்களத்திற்கு அல்லது பிரிவிற்கோ மாற்றப்படாமல் விளைவற்று வைக்கப்பட்டு சம்பளமாக அக்காலப்பகுதியின் போது ரூபா 611,804 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வவுனியா பிரதேச செயலகத்தின் முதலாவது மாடி நிர்மாணம், சுற்றுலா விடுதி நிர்மாணம் மற்றும் மாவட்ட செயலாளர் குடியிருக்கும் அரசாங்க விடுதியின் உணவகத்தை நிர்மாணித்தல் என்பவற்றுக்கு 2014 ஆம் ஆண்டில் ரூபா 12,986,800 தொகையும், 2015 ஆம் ஆண்டில் ரூபா 30,241,760 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த நிர்மாணத்தைத் திட்டமிடும் போது மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 20 | 20 | - | - |
| (ii) | மூன்றாம் நிலை | 15 | 06 | 09 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 349 | 237 | 112 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 66 | 51 | 15 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த) | - | 04 | - | 04 |
| | மொத்தம் | 450 | 318 | 136 | 04 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த மிகையான ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.